வருகின்ற 2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)**

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளான வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகள் போன்றவற்றை தினமும் 35 பணியாளர்களை கொண்டு 53 வேலை நாட்களுக்கு பணியாளர்களை வழங்க 04.11.2020 ஆம் தேதியன்று இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான விலைவிகிதம் ) |
|---|---|---|
| 1 | Trustus Out sourcing Solution Pvt Ltd, 117, 28th Street, Balaji Nagar, Chennai -600091. | ரூ.533/- |
| 2 | Relyon Facility Services Pvt Ltd,Plot no.142, 5th cross street, Sri sai nagar, Okkiam thoraipakkam , Chennai-600 097 | ரூ.535/- |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள Trustus Outsourcing Solutions Pvt Ltd, No. 117,28th Street, Balaji nagar, Chennai -600 091 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

2. நோய்தடுப்புப் பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய Trustus Outsourcing Solutions Pvt Ltd, Chennai அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.224/2020/எச்1)

3. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020-21 ன் கீழ் பவானி நகராட்சி வார்டு எண்.2 காமராஜ் நகரில் பூங்கா அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஈரோடு மாவட்டம், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண். 2483/2020/அ3, நாள்: 19.09.20 -ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 17/11/20 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|---|
| 1. | திருவாளர் ஸ்ரீ ராஜமுருகன் அசோசியேட்ஸ் | 0.03 % | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. M.S. குருசாமி | 1.20% | மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.03% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ஸ்ரீ ராஜ முருகன் அசோசியேட்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1181/2020/இ1)

4. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020-21 ன் கீழ் பவானி நகராட்சி வார்டு எண்.9 பழனிபுரம் 4வது வீதியில் பூங்கா அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஈரோடு மாவட்டம், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண். 2483/2020/அ3, நாள்: 19.09.20 -ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 17/11/20 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் | 0.04 % | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.பி.ஏ.செல்லப்பன் | 1.10% | மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.04% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்ரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1181/2020/இ1)

5. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020-21 ன் கீழ் பவானி நகராட்சி வார்டு எண்.24 பழைய பேருந்து நிலையம் அருகில் மசூதி தென்புறம் பூங்கா அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஈரோடு மாவட்டம், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண். 2483/2020/அ3, நாள்: 19.09.20 -ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 17/11/20 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1. | திருவாளர் ஸ்ரீ ராஜமுருகன் அசோசியேட்ஸ் | 0.02 % | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு. M.S. குருசாமி | 1.32% | மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.02% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ஸ்ரீ ராஜமுருகன் அசோசியேட்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1181/2020/இ1)

6. பவானி நகராட்சியில் 21.01.2007 -ல் வேலை வாய்ப்பகம் மூலம் தகுதி வாய்ந்த நபர்கள் பட்டியல் பெறப்பட்டு 29.01.20007-ல் நேர்முக தேர்வு நடத்தப்பட்டு அரசாணைப்படி 12 துப்புரவு பணியாளர்களை பணி நியமனம் செய்யப்பட்டதை தொடர்ந்து திருமதி.பழனியம்மாள் க/பெ. முருகேசன் 2) திருமதி.கே.செல்லம்மாள், 3) திரு.கே. ஆறுமுகம் ஆகிய மூவரும் 1. மாவட்ட ஆட்சித் தலைவர்,ஈரோடு 2) ஆணையாளர் பவானி நகராட்சி மற்றும் 10 துப்புரவு பணியாளர்கள் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.2986/2007 வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்கண்ட வழக்கினை நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ( உள்ளாட்சி துறை மற்றும் நிர்வாகம்) Standing Counsel திரு. P.S.ஜெயக்குமார், அவர்கள் ஆஜராகி நடத்தி வருகிறார். மேற்கண்ட வழக்கிற்கு நீதிமன்ற வழக்கு கட்டணம் ரூ.23,000/- வழங்குமாறு P.S.ஜெயக்குமார் வழக்கறிஞர் அவர்கள் தனது 18.11.2020 ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

எனவே நீதிமன்ற வழக்கு செலவினம் மற்றும் வழக்கு கட்டணம் ரூ.23,000/- ஐ வழக்கறிஞர் திரு.P.S. ஜெயக்குமார் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் ரூ.23,000/- ஐ பொது நிதியில் இருந்து திரு. P.S.ஜெயக்குமார் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1449/2020/சி1)

7. பவானி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19 ன் ( ச.ம.உ.நிதி - ரூ.8.70 இலட்சம் ந.பொ.நிதி 0.80 இலட்சம் ) ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 சொக்கராயன் காடு பகுதியில் புதிய அங்கன்வாடி மையக்கட்டிடம் கட்டும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஈரோடு அவர்களின் நிர்வாக அனுமதி எண். 1888/2018/ அ3, நாள்: 22.02.2019 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் பணி துவங்கும் நேரத்தில் பொது மக்கள் தொடர்ந்து ஆட்சேபனை தெரிவிப்பதால் பணியினை செயல்படுத்த முடியாத நிலை உள்ளது.

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மற்றும் சட்ட மன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேற்கண்ட பணியினை இரத்து செய்துவிட்டு வார்டு எண்.11 தேவபுரம் பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்ட திருத்திய நிர்வாக அனுமதி வழங்க கோரியுள்ளார்.

மேற்காணும் கோரிக்கையின் அடிப்படையில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதியை இரத்து செய்து, அப்பணிக்கு பதிலாக வார்டு எண்.11 தேவபுரத்தில் பழுதடைந்த அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்ட திருத்திய நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று திருத்திய நிர்வாக அனுமதி வழங்க கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.009/2020/இ1)

8. பவானி நகராட்சிக்கு சொந்தமான வணிக கடைகளுக்கு மாத வாடகையுடன் சேர்த்து வசூல் செய்யும் சேவை வரி GST 18% தொகையை மாதமாதம் மத்திய கலால் வரி அலுவலகத்திற்கு online -ல் Return filing செய்ய திரு.விஷ்ணுபிரகாஷ் ஆடிட்டர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி GST ஆகஸ்ட் 2018 முதல் ஆகஸ்ட் 2020 வரை online return filing செய்த வகையில் தொகை ரூ.37500/- வழங்கக் கோரியுள்ளார். தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.173/2018/அ2)

9. இந்நகராட்சி பகுதியில் நகரின் பொது சகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் சுற்றிதிரியும் பன்றிகளை உயிருடன் பிடித்து மலைப்பகுதியில் உயிருடன் விட்டு வரும் பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் 27.11.2020-ஆம் தேதி மாலை 4.00 மணி வரை விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் (ஒரு பன்றியினை உயிருடன் பிடித்து மலைப்பகுதியில் உயிருடன் விட்டு வருவதற்கு) |
|---|---|---|
| 1 | M. பால்ராஜ்,<br>ஆல் இண்டியா பன்றி மற்றும் நாய் பிடிப்பவர்<br>திருப்புவனம், சிவகங்கை(மா) 9894280781 | ரூ.81/- |
| 2 | C. ராஜலிங்கம்,<br>ஆல் இண்டியா பன்றி மற்றும் நாய் பிடிப்பவர்,<br>திருமங்கலம், மதுரை மாவட்டம். 9894496242. | ரூ.110/- |
| 3 | K. மோகன்,<br>வடக்குதெரு, மதுரை 99426 80041. | ரூ.95/- |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்: 1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s எம். பால்ராஜ், ஆல் இண்டியா பன்றி மற்றும் நாய் பிடிப்பவர், திருப்புவனம், சிவகங்கை (மாவட்டம்) அவர்களின் விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.286/2020/எச்1)

10) பவானி நகராட்சிக்கு சொந்தமான கீழே விவரிக்கப்பட்ட குத்தகை இனங்கள் 2021-2022 முதல் 2023-2024 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவம் செய்து கொள்ளும் உரிமையினை பொது ஏலத்தில் விட தயாரிக்கப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்டுள்ள பொது நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்டுள்ள பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் புதிய பேருந்து நிலையத்தில் பஸ்ஸில் ஏறி இஞ்சி முறைப்பா, பர்பி ஆகியவைகளை தட்டில் எடுத்து சென்று விற்பனை செய்யும் உரிமம் கடந்த சுமார் பத்து ஆண்டுகளாக ஏலம் கோர எவரும் முன்வருவதில்லை.

புதிய பேருந்து நிலையத்தில் தென்புறம் சைக்கிள் டயர் பொருத்திய தள்ளுவண்டியில் வளையல் வைத்து வியாபாரம் செய்யும் உரிமை 2 கடைகள் (தனித்தனியாக) நடத்தும் உரிமம் கடந்த பத்து ஆண்டுகளாக ஏலம் கோர எவரும் முன் வருவதில்லை. மேற்கண்ட இரண்டு குத்தகையினங்களை குத்தகையினம் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

அந்தியூர் பிரிவு பகுதியில் நகராட்சி கடைகளுக்கு பின்புறம் புதியதாக கட்டப்பட்டுள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் மற்றும் கட்டண கழிப்பிடம் நடத்துவதற்கும் சுங்கம் வசூல் செய்யும் உரிமை ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பவானி நகராட்சிக்கு சொந்தமான புன்னம் கிராமத்தில் உள்ள 10.44 ஏக்கர் புன்செய் நிலத்தில் விவசாயம் செய்யும் உரிமம் ( சர்வே எண்.170/5,172/1,2,3,4,5,6, 173/3,4, 196/2, 197 ) ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கையை கூட்டுறவு அச்சகத்தில் அச்சு செய்து கொள்ளவும் மற்றும் ஏல விளம்பர அறிக்கையை செய்தித்தாளில் விளம்பரம் செய்ய அதற்கான உத்தேச செலவினம் ரூ.100000/- (ஒரு இலட்சம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.1450/2020/அ2)

## ( 2021-2022 முதல் 2023 -2024 ) மூன்றாண்டு குத்தகை இனங்கள்

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைக்கு செலுத்த வேண்டிய வைப்புத் (Deposit) தொகை ரூ. | தேசிய மயமாக்கப் பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை அல்லது 1.10.2020க்கு பிறகு பெறப்பட்ட சொத்து மதிப்பு சான்று | செல்வநிலை சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் (Deposit )தொகை ரூ. | ஏலம் உறுதி ஆனவுடன் செலுத்த வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பழைய வாரச்சந்தை மையத்தில் நடைபெற்று வரும் தினசரி காய்கறி அங்காடி நுழைவு வாயில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு சரக்கு கொண்டு வரும் சரக்கு வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம். | 8,00,000/- (ரூ.எட்டு லட்சம் மட்டும்) | 15,00,000/- (ரூ.பதினைந்து லட்சம் மட்டும்) | 5,00,000/- | ஏலம் உறுதி செய்யப்பட்டவுடன் உரிமத்தொகை முழுவதும், வருமான வரி 2% மற்றும் GST செலுத்த வேண்டியது |
| 2 | நகராட்சி புதிய பேருந்து மற்றும் பழைய பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் டாக்ஸிகள் வேன்கள் மற்றும் இதர மோட்டார் வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000/- (ரூ.மூன்று லட்சம் மட்டும்) | 12,00,000/- (ரூ.பனிரெண்டு லட்சம் மட்டும்) | 2,00,000/- | -- do -- |
| 3. | புதிய பேருந்து நிலையத்தில் தொலைகாட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம். | 1,50,000/- (ரூ.ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) | 3,00,000/- (ரூ.மூன்று லட்சம் மட்டும்) | 1,00,000/- | -- do -- |
| 4 | புதிய பேருந்து நிலையத்தில் தென்புறம் தகரப்பெட்டி வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம்- 6 கடைகள் (கடை ஒன்றுக்கு) | 11,000/- பதினோராயிரம் ஆயிரம் மட்டும்) | 22,000/- (ரூ.இருபத்தி இரண்டாயிரம் மட்டும்) | 5,000/- | -- do -- |
| 5. | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம். | 3,00,000/- (ரூ.மூன்று லட்சம் மட்டும்) | 5,00,000/- (ரூ.ஐந்து லட்சம் மட்டும்) | 2,00,000/- | -- do -- |
| 6. | பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 1,00,000/- (ரூ.ஒரு இலட்சம் மட்டும்) | 1,00,000/- (ரூ.ஒரு லட்சம் மட்டும்) | 50,000/- | -- do -- |
| 7. | நகராட்சிக்கு சொந்தமான மீன் அங்காடியில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | 5,00,000/- (ரூ.ஐந்து லட்சம் மட்டும்) | 6,00,000/- (ரூ.ஆறு லட்சம் மட்டும்) | 1,50,000/- | -- do -- |
| 8. | புதிய பேருந்து நிலையத்தில் ஒரு பூக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் (ஐ.யு.டி.பி.திட்டக்கடை எண்.1-க்கு முன்புறம் பில்லருக்கு அருகில் பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல் வைத்துக் கொள்ள வேண்டும்) | 50,000/- (ரூ.ஐம்பது ஆயிரம் மட்டும்) | 1,00,000/- (ரூ.ஒரு லட்சம் மட்டும்) | 20,000/- | -- do -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | செல்லியாண்டியம்மன் அங்காடியில் கடைகளுக்கு பின்புறமுள்ள இருச்சக்கர வாகனம் நிறுத்துமிடம் சுங்கம் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 50,000/- (ரூ.ஐம்பதாயிரம் மட்டும்) | 75,000/- (ரூ.எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) | 25,000/- | -- do -- |
| 10 | ஆடு அடிக்கும் தொட்டியில் சுங்கம் வசூலிக்கும் உரிமம். | 10,000/- (ரூ.பத்தாயிரம் மட்டும் ) | 20,000/- ( ரூ.இருபதாயிரம் மட்டும் ) | 5,000/- | -- do -- |
| 11 | நகராட்சிக்குட்பட்ட அந்தியூர் பிரிவு பகுதியில் அமைந்துள்ள நகராட்சி கடைகளுக்கு பின்புறம் உள்ள இடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் அதன் வளாகத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடம் சுங்கம் வசூல் செய்யும் உரிமம். | 2,00,000/- (ரூ.இரண்டு இலட்சம் மட்டும்) | 3,00,000/- (ரூ. மூன்று இலட்சம் மட்டும்) | 1,00,000/- | -- do -- |
| 12 | பவானி நகராட்சிக்கு சொந்தமான புன்னம் கிராமத்தில் உள்ள 10.44 ஏக்கர் புன்செய் நிலத்தில் விவசாயம் செய்யும் உரிமம் சர்வே எண்.170/5,172/1,2,3,4,5,6,173/3,4, 196/2,197 | 25,000/- (ரூ.இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) | 5,00,000/- (ரூ. ஐந்து இலட்சம் மட்டும்) | 1,00,000/- | -- do -- |

11. இந்நகராட்சியால் தினமும் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை கொண்டு இரண்டு MCC மையங்களில் கலவை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மக்கும் குப்பைகளை விரைவாக மக்க செய்ய Maple EM. I Enviro Pro Solution திரவம் தெளித்து பணியினை துரிதபப்படுத்தி மேற்கொள்ள ஏதுவாக Maple EM. I Enviro Pro Solution கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் இப்பணிக்கு தேவையான Maple EM. I Enviro Pro Solution திரவத்தை அரசு கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்து பணி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே, மேற்குறிப்பிடட நிறுவனத்திடமிருந்து Maple EM. I Enviro Pro Solution திரவம்1-லிட்டர் ரூ. 972/- (GST உட்பட) என்ற விலைவிகிதத்தில் இந்நகராட்சிக்கு தேவைப்படும் 50 லிட்டர் திரவத்தினை கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50 ஆயிரத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1551/2020/எச்1)

12. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிக்கு ( Anti Adult Mosquito Control Measures ) உபயோகப்படுத்தப்படும் புகைத் தெளிப்பான் மிஷின்கள் ( Fogging Machines) புதியதாக கொள்முதல் செய்து கொசுக்களால் பரவும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த வேண்டி உள்ளது. எனவே Portable Thermal fogging Machine ( Outdoor) -2 எண்ணிக்கையும் Handy Fogging Machine (Indoor )-4 LPG Cylinder 25 எண்ணிக்கையும் மற்றும் புதியதாக கொள்முதல் செய்து கொசுவினால் பரவும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1463/2020/எச்1)

13. பவானி நகராட்சி பகுதியில் புரட்சிதலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டம் சம்மந்தமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் வருவாய் ஈட்டுபவர் (Bread Winner) மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர் (Nominee) விபரங்களை களப்பணிக்கு சென்று குடும்ப உறுப்பினர்களிடமிருந்து ஆதார் எண், ஸ்மார்ட் கார்டு எண், மற்றும் வங்கி கணக்கு எண், வங்கி கிளை, IFSC code, முழு அஞ்சல் முகவரி போன்றவற்றை இந்நகராட்சி பகுதியில் களப்பணியில் பெறுதல் மற்றும் பெறப்படும் விபரங்களை தினமும் Online-ல் WWW.TIPPS.IN Web site-இல் பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ள 18.11.2020ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளியின் விபரம்:**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | Field survey per record | Online Data entry per record | Total |
|---|---|---|---|---|
| 1 | Yours Net,<br>Mettur Main road,<br>Bhavani. | Field Survey<br>Rs.6.50/- | Online Data entry<br>Rs.6.50/ | Rs.13.00/- |
| 2 | M. Muthuvel,<br>17, M.S. Complex, Pavadi Street,<br>Anthiyur corner, Bhavani | Field Survey<br>Rs.5.00/- | Online Data entry<br>Rs.5.00/ | Rs.10.00/- |
| 3 | AVR computers,<br>205, Mettur Mainroad,<br>Bhavani. | Field Survey<br>Rs.6.50/- | Online Data entry<br>Rs.6.00/ | Rs.12.50/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 2 கண்டுள்ள M/S M. Muthuvel, 17, M.S. Complex, Pavadi Street, Anthiyur corner, Bhavani அவர்களின் விலைப்புள்ளி மற்ற இரண்டை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரிடம் முன் அனுமதி பெற்று M. Muthuvel, 17, M.S. Complex, Pavadi Street, Anthiyur corner, Bhavani பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1058/2020/எச்1)

14 .இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் கொசுக்கள் மற்றும் ஈக்கள் மூலம் பரவும் தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் பணிகளுக்கு Pyrethrum 2% Extract மருந்து, TEMEPHOS EMULSIFIABLE 50% EC, மற்றும் Bacillus Thuringiensis 5% WP கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு நோய்த்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி மருந்துகளை கொள்முதல் செய்ய TNMSC நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட மருந்து விநியோக நிறுவனத்தின் விநியோகம் செய்திட நிர்ணயம் செய்திட நிர்ணயிக்கப்பட்ட காலம் 13.11.2020 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் இந்நகராட்சிக்கு மேற்படி மருந்துகள் தற்பொழுது நோய்த்தடுப்பு பணிகளுக்கு Pyrethrum 2% Extract - 100 லிட்டர், TEMEPHOS EMULSIFIABLE 50% EC- 40 லிட்டர் , மற்றும் Bacillus Thuringiensis 5% WP- 100 கிலோ தேவைப்படுவதால் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அழைப்பின் மூலம் கொள்முதல் செய்து தொற்று தடுப்பு பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.281/2020/எச்1)

15. பவானி நகராட்சி - தூய்மை இந்தியா திட்டம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக பவானி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி தரம் பிரித்து கையாளப்பட்டு வருவதுடன், இந்நகராட்சியில் Secondary Storage and Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, பவானி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெறுவதற்கு இந்நகராட்சியின் சுய உறுதிமொழி சான்றிதழுக்கும் (Self Declaration) இந்நகராட்சியினால் பெறப்பட்டுள்ள சுய உறுதிமொழி சான்றிதழ்களுக்கும் (Self Declaration from citizen categories) ஏற்கனவே மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொதுமக்களின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துகளை பெறுவதற்கு 3.11.2020ம் தேதியில் தினந்தந்தி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. செய்தி வெளியிடப்பட்டு 15 தினங்களுக்குள் யாதொரு ஆட்சேபனைகளோ, கருத்துருக்களோ, நேரிலோ, தபால் மூலமாகவோ பொதுமக்கள் மற்றும் இதர பிரதிநிதிகளிடமிருந்தோ இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்திற்கு வைக்கப்படுகிறது. யாதொரு ஆட்சேபனைகளோ, கருத்துருக்களோ, வராததால் இந்நகராட்சிக்கு SWM-ல் GFC-யில் 3 Star Rating (மூன்று நட்சத்திர அங்கீகாரம்) பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.359/2019/எச்1)

16. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில உள்ள IHSDP கடை எண்.37 ஐ திரு.என்.எஸ்.மணி என்பவர் கடையை நடத்த இயலவில்லை என நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார். கடை எண். 37-ஐ ஏலத்திற்கு கொண்டு வரவும். மேலும் கடை எண். 32,33,34,35,38,39 ஆகிய ஆறு கடைகளை மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் 30.11.2020 -ல் முடிவடைவதால் உரிமத்தை புதுப்பித்துத் தரக்கோரி மனு கொடுத்துள்ளார். ஏற்கனவே உள்ள மாத வாடகை தொகையிலிருந்து 15 % சதவீதம் உயர்வு செய்து 01.12.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கலாம் அதில் ஒன்பது மாத வாடகை வித்தியாசத் தொகையை முன் வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும் கீழ்கண்ட கடைகள் புதிய வாடகை விபரம் பின்வருமாறு.

| வரிசை எண். | கடை எண். | வரிவிதிப்பு எண். | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு | புதிய வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 32 | 055/87 | ஜே.பாக்கியம் | 4500 | 675 | 5175 |
| 2 | 33 | 055/88 | எம்.ரவிச்சந்திரன் | 4500 | 675 | 5175 |
| 3 | 34 | 055/89 | செல்வம்.சி | 4500 | 675 | 5175 |
| 4 | 35 | 055/90 | ஆர்.வசந்தா | 4500 | 675 | 5175 |
| 5 | 38 | 055/93 | எம்.புஷ்பா | 4500 | 675 | 5175 |
| 6 | 39 | 055/94 | எ.பழனியப்பன் | 4500 | 675 | 5175 |

மேற்கண்ட கடைகளை புதுப்பித்து வழங்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2331/2016/அ2)

17. பவானி நகராட்சியில் தற்போது சேமித்து இருப்பு வைக்கப்பட்டுள்ள மற்றும் தினமும் சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகளை M/s Ultratech Cements Ariyalur, M/s Dalmia Cements Dalmiapuram, M/s ACC Cements மதுக்கரை, கோயம்புத்தூர், M/s இந்தியா சிமெண்ட்ஸ், சங்ககிரி போன்ற சிமெண்ட் ஆலைகளுக்கும் மற்றும் M/s Mak India Ltd, Erode அவர்களுக்கும் ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த தேவையான JCB வாகனம் மற்றும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை வாடகைக்கு அமர்த்தும் முறையில் ஈடுபடுத்தி கழிவுகளை கொண்டு சென்று இறுதியாக்கம் (Final Disposal of Combustible Wastes) செய்யும் பணிக்கு 27.11.2020 ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | வாகனங்களை விநியோகிக்க வேண்டியதன் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052. | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை சரக்கு லாரியில் ஏற்றிட JCB வாகனம் ஒரு மணி நேரத்திற்கு விநியோகம் செய்ய | ரூ.1038/- Per hour |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Dalmia Cements, Dalmiapuram-ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.16532/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s ACC Cements மதுக்கரை, கோயம்புத்தூருக்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.11267/- Per Lorry/Per trip |
| | | | |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s India Cements, Sankari-க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.5928/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Mak India Ltd, Erode -ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.5858/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Ultratech Cements Ariyalur -க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.16532/- Per Lorry/Per trip |
| | | | |
| 2 | S. பாலசுப்ரமணியன், 223-ஜி3, மண்தொழிலாளர் முதல் வீதி, மேற்கு தெரு, பவானி | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை சரக்கு லாரியில் ஏற்றிட JCB வாகனம் ஒரு மணி நேரத்திற்கு விநியோகம் செய்ய | ரூ.1070/- Per hour |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Dalmia Cements, Dalmiapuram-ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.17227/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s ACC Cements மதுக்கரை, கோயம்புத்தூருக்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.11513/- Per Lorry/Per trip |

| | | | |
|---|---|---|---|
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s India Cements, Sankari-க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி | ரூ.6153/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Mak India Ltd, Erode -ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.6388/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Ultratech Cements Ariyalur -க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle). லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.17334/- Per Lorry/Per trip |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அவாகளின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண்.1697/2019/எப்1)

18. இந்நகராட்சி பகுதியில் சேரும் கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்க தேவைப்படும் பிளாஸ்டிக் டப்பாக்கள் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.102, நாள்: 30.04.2020 -ல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் இப்பணிக்கு 24.11.2020 ஆம் ஒப்பந்தப்புள்ளிகள்ள பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|
| 1.ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் 1/34, காளப்பநாயக்கன்பட்டி, சேந்தமங்கலம்(TK) நாமக்கல் (Dt) | 80 liters Dust Bins<br>Top Dia - 475 mm<br>Bo Hemdia - 370mm<br>Height -770 mm<br>Handles - 2 nos<br>ரூ.1400/- (ஒன்றின் விலை) |
| | **50 liters Dust Bins**<br>Top Dig - 410 mm<br>Bottam dia - 330mm<br>Height - 575 mm<br>Handles - 2 nos (HDPE)<br>ரூ.1150/- (ஒன்றின் விலை) |
| 2.ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்ரேசன் R.No 6,R.S பில்டிங், | **80 liters Dust Bins**<br>Top Dia - 475 mm<br>Bottam Dia - 370mm<br>Height -770 mm<br>Handles - 2 nos<br>ரூ.1360/- (ஒன்றின் விலை) |

| | |
|---|---|
| குளக்கரை, காமராஜ் நகர், நாமக்கல். | **50 liters Dust Bins**<br>Top Dia - 410 mm<br>Bottam dia - 330mm<br>Height - 575 mm<br>Handles - 2 nos (HDPE)<br>ரூ.1120/- (ஒன்றின் விலை) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2-ல் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்பரேசன், R.No 6,R.S பில்டிங், குளக்கரை, நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் அங்கீகரித்து ஒப்புதல் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.275/2020/எச்1)

19. பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணியில் பம்ப் ஹவுஸ் கிளினர், ரிசர்வாயர் கிளீனர், மேல்நிலைத்தொட்டி இரவுக்காவலர் மற்றும் பில்டர் பெட் கிளினர் ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளதால் குடிநீர் பராமரிப்பு பணிகளில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் தற்காலிகமாக இரண்டு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தி பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.80000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1405/2020/இ1)

20. பவானி நகராட்சியில் நடைபெற்று வருகின்ற திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டங்களை தற்பொழுது video conference மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் மூலம் நடைபெற்று வருகின்றது. இதற்கு ஆணையாளர் அறையில் உள்ள கணிணியில் புதியதாக microphone மற்றும் Speakers இணைக்க வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2020-21 ன் கீழ் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1511/2020/இ1)

21. பவானி நகராட்சி ஆணையாளர் அறையில் உள்ள கணிணிக்கு புதியதாக microphone மற்றும் Speakers பொருத்தும் பணிக்கு செலவுத் தொகை ரூ.3000/-க்கு தனி அலுவலர் அவர்கள் 16/11/2020 அன்று முன் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 20.11.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர். Hareesh IT Solutions2, Erode. | ரூ.2900/- |
| 2. | திருவாளர் VL Computers Erode | ரூ.3020/- |
| 3. | திருவாளர் Azure Technologies Erode | ரூ.3160/- |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் Hareesh IT Solution அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1511/2020/இ1)

22. பவானி நகராட்சி குப்பை கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை ( Legacy Waste) தூய்மை இந்தியா திட்டம் 2018-19 - திடக்கழிவு மேலாண்மை பணியில் ரூ. 221.00 இலட்சம் மதிப்பீட்டில் Bio Mining முறையில் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணி நிறைவுற்றது. இப்பணியில் தரை மட்டத்திற்கு மேல் அளவீடு செய்துள்ளபடி 33556 கன .மீட்டர் அளவுக்கு உள்ள குப்பைகளை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி குப்பை கிடங்கில் தடை மட்டத்திற்கு கீழ் ( Below Ground Level) பழைய குப்பைகள் 9300 கன மீட்டர்( Legacy waste) அகற்றப்பட வேண்டியுள்ளதால் இதனை Bio mining முறையில் அப்புறப்படுத்த மதிப்பீடு ரூ.75.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது மேற்படி பணிக்கு தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20452/2020/LA3, நாள்:10.11.2020 ஒதுக்கீடு செய்துள்ளபடி 15th CFC மானியத் தொகையாக ரூ.50,69,756/- வரப்பெற்றுள்ள நிதியினை இப்பணிக்கு நகராட்சி பங்களிப்பு தொகையாக பயன்படுத்திக் கொள்ளவும் உரிய உத்தரவு வேண்டி விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.557/2018/இ1)

**இடம்: பவானி**

**நாள்: 30.11.2020**

(ஒம்) திரு.க.கதிர்வேல்
ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்
பவானி நகராட்சி